ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ ஆலைநீள் கரும்பு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆலைநீள் கரும்பு ॥

சேய் வளர் காட்சியின் சீரை யசோதை போல்
தாய் தேவகி பெறாத் தாழ்வெண்ணிப் புலம்பல்

‡ஆலை நீள் கரும்பன்னவன் தாலோ⋆
அம்புயத் தடங்கண்ணினன் தாலோ⋆
வேலை நீர் நிறத்தன்னவன் தாலோ⋆
வேழப் போதகம் அன்னவன் தாலோ⋆
ஏல வார் குழல் என்மகன் தாலோ⋆
என்றென்றுன்னை என் வாயிடை நிறையத்⋆
தால் ஒலித்திடும் திருவினை இல்லாத்⋆
தாயரில் கடை ஆயின தாயே (1)

வடிக் கொள் அஞ்சனம் எழுது செம் மலர்க் கண்⋆
மருவி மேல் இனிதொன்றினை நோக்கி⋆
முடக்கிச் சேவடி மலர்ச் சிறு கருந்தாள்⋆
பொலியும் நீர் முகிற் குழவியே போல⋆
அடக்கியாரச் செஞ்சிறு விரல் அனைத்தும்⋆
அங்கையோடணைந்தானையிற் கிடந்த⋆
கிடக்கை கண்டிடப் பெற்றிலன் அந்தோ⋆
கேசவா! கெடுவேன் கெடுவேனே (2)

முந்தை நன்முறை அன்புடை மகளிர்⋆
முறை முறை தம் தம் குறங்கிடை இருத்தி⋆
எந்தையே! என்தன் குலப் பெரும் சுடரே⋆
எழு முகில் கணத்தெழில் கவர் ஏறே⋆
உந்தை யாவன் என்றுரைப்ப⋆ நின் செங்கேழ்
விரலினும் கடைக் கண்ணினும் காட்ட⋆
நந்தன் பெற்றனன் நல்வினை இல்லா⋆
நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே (3)

www.prapatti.com

களிநிலா எழில் மதி புரை முகமும்⋆
கண்ணனே! திண்கை மார்வும் திண் தோளும்⋆
தளி மலர்க் கருங்குழல் பிறை அதுவும்⋆
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த⋆
இளமை இன்பத்தை இன்றென்தன் கண்ணால்⋆
பருகு வேற்கிவள் தாயென நினைந்த⋆
அளவில் பிள்ளைமை இன்பத்தை இழந்த⋆
பாவியேன் எனதாவி நில்லாதே (4)

மருவும் நின் திரு நெற்றியில் சுட்டி
அசைதர⋆ மணி வாயிடை முத்தம்
தருதலும்⋆ உன்தன் தாதையைப் போலும்
வடிவு கண்டு கொண்டு⋆ உள்ளம் உள் குளிர⋆
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து⋆
வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும்⋆
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன்⋆ எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே (5)

தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணா⋆
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால்⋆
மண்ணில் செம் பொடி ஆடி வந்து⋆ என்தன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ⋆
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்⋆
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்⋆
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடு வினையேன்⋆
என்னை என் செய்யப் பெற்றதெம் மோயே (6)

குழகனே! என்தன் கோமளப் பிள்ளாய்⋆
கோவிந்தா! என் குடங்கையில் மன்னி⋆
ஒழுகு பேர் எழில் இளம் சிறு தளிர் போல்⋆
ஒரு கையால் ஒரு முலை முகம் நெருடா⋆
மழலை மென்னகை இடை இடை அருளா⋆
வாயிலே முலை இருக்க என் முகத்தே⋆



www.prapatti.com

எழில் கொள் நின் திருக் கண்ணிணை நோக்கந்
    தன்னையும்⋆ இழந்தேன் இழந்தேனே (7)

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்⋆
    முகிழ் இளம் சிறுத் தாமரைக் கையும்⋆
எழில் கொள் தாம்பு கொண்டடிப்பதற் கெள்கு
    நிலையும்⋆ வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும்⋆
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்⋆
    அணி கொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும்⋆
தொழுகையும் இவை கண்ட அசோதை⋆
    தொல்லை இன்பத்திறுதி கண்டாளே (8)

குன்றினால் குடை கவித்ததும்⋆ கோலக்
    குரவை கோத்ததும் குடம் ஆட்டும்⋆
கன்றினால் விளவெறிந்ததும்⋆ காலால்
    காளியன் தலை மிதித்ததும் முதலா⋆
வென்றி சேர் பிள்ளை நல் விளையாட்டம்
    அனைத்திலும்⋆ அங்கென் உள்ளம் உள் குளிர⋆
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன் அடியேன்⋆
    காணும் ஆறினி உண்டெனில் அருளே (9)

வஞ்ச மேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி⋆
    வரண்டு நார் நரம்பெழக் கரிந்துக்க⋆
நஞ்சம் ஆர்தரு சுழி முலை அந்தோ⋆
    சுவைத்து நீ அருள் செய்து வளர்ந்தாய்⋆
கஞ்சன் நாள் கவர் கரு முகில் எந்தாய்⋆
    கடைப்பட்டேன் வறிதே முலை சுமந்து⋆
தஞ்ச மேல் ஒன்றிலேன் உய்ந்திருந்தேன்⋆
    தக்கதே நல்ல தாயைப் பெற்றாயே (10)

‡மல்லை மா நகர்க்கிறையவன் தன்னை⋆
    வான் செலுத்தி வந்தீங்கணை மாயத்து⋆
எல்லையில் பிள்ளை செய்வன காணாத்⋆
    தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல்⋆


www.prapatti.com

கொல்லி காவலன் மால் அடி முடி மேல்⋆
    கோலமாம் குலசேகரன் சொன்ன⋆
நல் இசைத் தமிழ் மாலை வல்லார்கள்⋆
    நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே (11)

‖ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com